Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

திங்கட்கிழமை ஜனவரி 16, 2023 | ஒளி: 08 கதிர் 187 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | விலை ரூ.10

# பொங்கல் தினத்தன்று போராட்டம்

**ஜனாதிபதியின் யாழ் விஜயத்துக்கு எதிர்ப்பு**

**அரசடி சந்தியில் பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம்**





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரால் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நல்லூரில் ஏற்பாடு செய்யப்பட்ட அரச தைப் பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்று (15) விஜயம் செய்திருந்த ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தொடர்ச்சி P2

## பாடசாலைகள் இன்று இயங்கும்

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளும் வழக்கம் போல் இன்று (16) திறக்கப்படும் என்று அறிவித்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், ஞாயிற்றுக்கிழமை (15) பொங்கல் பண்டிகை காரணமாக, பாடசாலைகள் யாவும் இன்று (16) மூடப்படும் என்ற செய்தி வதந்தியாகும் என்றார்.

## மு.க ஸ்டாலினை சந்தித்தார் செந்தில்



மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200வது ஆண்டை நினைவு கூறும் முகமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானால் முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

## உ/த பரீட்சை காலத்தில் மின்வெட்டு இல்லை?

**இன்று விசேட கலந்துரையாடல்**



கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையை முன்னிட்டு, தொடர்ச்சியாக மின் விநியோகத்தை வழங்குவது தொடர்பில் இன்று (16) விசேட கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

## பைசர் இராஜினாமா



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப -தலைவர் பைசர் முஸ்தபா கட்சியில் இருந்தும் கட்சியில் தான் வகித்த அனைத்து பதவிகளிலும் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தீர்ப்பு

# பதவி விலகுமாறு மைத்திரிக்கு நெருக்கடி

**ஹெலியில் போட்டியிடுவது குறித்து ஆராய்கிறது கை**

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலை தடுக்க தவறினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கட்சிக்குள் சிறிசேன எதிர்ப்பாளர்கள் உருவாகியுள்ளதுடன் அவரை பதவியில் இருந்து விலகுமாறு வலியுறுத்தி வருவதாக அறியமுடிகிறது.

அதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திர மக்கள் கூட்டணியின் ஓர் அங்கமாக ஹெலிகொப்டர் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருவதாக அறியமுடிகிறது. தொடர்ச்சி P2



பிரதிநிதிகள் நியமனத்துக்கான

## கால அவகாசம் நிறைவடைந்தது



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் நியமனத்துக்கான கால அவகாசம் நேற்றுடன் (15) நிறைவடைந்த நிலையில், பிரதிநிதிகள் நியமனத்தை பூர்த்தி செய்யுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது. தொடர்ச்சி P2

## கஞ்சா செடி விவகாரம் எதிமால ஓ.ஐ.சி பணிநீக்கம்

மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து, எதிமால பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (ஓ.ஐ.சி) சஞ்சய தர்மதாச பொலிஸ் மா அதிபரினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

## முஜிபுரின் எம்.பி பதவி இருவருக்கு சாத்தியம்?




எதிர்வரும் உள்ளராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு முஜிபுர் ரஹ்மான் போட்டியிடவுள்ள நிலையில் அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுக்கு அல்லது ஏ.எச்.எம் பௌசிக்கு வழங்கப்படலாம் என்று அறியமுடிகிறது. தொடர்ச்சி P2

ஓமான் பாதுகாப்பு இல்லத்தில் இருந்து

## 15 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

ஓமானின் மஸ்கட்டில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த மேலும் 15 இலங்கை பணிப்பெண்கள் தொடர்ச்சி P2



## தைப்பொங்கல் ஒரு முன்னுதாரண பண்டிகை

தைப்பொங்கல் உண்மையில் ஒரு நாட்டின் சகவாழ்வு, மனித மாண்பு, பல்கலாசார அடையாளங்களுக்கு மதிப்பளித்தல், அதனை ஏற்றுக்கொள்தல், சகல ஜீவராசிகளுக்கும் மதிப்பளித்தல் போன்ற பெறுமானங்களுக்கு பெரிதும் வழிகாட்டும் ஓர் பண்டிகையாக அமைவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழா-2023 நிகழ்வு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அலுவலக வளாகத்தில் நேற்று (15) காலை இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தாவது,

உலக வாழ் இந்த பக்தர்கள் மிகுந்த சந்தோசத்துடன் சகோதரத்துவத்துடனும் கொண்டாடும் உற்சவமாகும் என்றார்.

உழவு முதல் அறுவடையைப் பெற்றுக் கொண்டு சூரிய கடவுளுக்கு தொடர்ச்சி P2

புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம்

## அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படும்

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் என்று நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ஸ தெரிவித்தார்.

புதிய சட்டமூலத்தை அடுத்த வாரத்திற்குள் அமைச்சரவையில் முன்வைக்கும் நோக்கில் அமைச்சரவை செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாக நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரின்புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நாளிந்த இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணை தலைமையுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.





## மத தலைவர்களை சந்தித்து ஆசி பெற்றார் ஜனாதிபதி

அரச தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மதத் தலைவர்களை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

நேற்று (15) காலை யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார். தொடர்ச்சி P2





சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு

## ஒத்துழைப்பை வழங்குமாறு ஆணைக்குழு கோரிக்கை

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறு அரசாங்கம், அரசியல் கட்சிகள், மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. தொடர்ச்சி P2

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்

## இந்தி மொழி இருக்கை ஸ்தாபிக்க ஒப்பந்தம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் இந்திமொழி இருக்கையினை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்தது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பொங்கல் தினத்தன்று போராட்டம்

ஜனாதிபதியின் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து முன்னெடுக்கப்பட்ட போராட்ட பேரணி நல்லூர் நோக்கி பயணித்தது. அதன்போதே அரசடி சந்தியில் வைத்து பேரணி மீது பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்ட காரணத்தால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

# பதவி விலகுமாறு மைத்திரிக்கு நெருக்கடி

கூட்டணியுடன் ஒன்றிணைந்து போட்டியிடுவதா அல்லது கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் ஆட்சேபனைகளுக்கு அமைய கூட்டணியில் இருந்து வெளியேறுவதா என்பது குறித்து கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த புதன்கிழமையன்று (11) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்டோர் இணைந்து சுதந்திர மக்கள் கூட்டணி என்ற புதிய கூட்டணியை ஹெலிகொப்டர் சின்னத்தில் உருவாக்கி அங்குரார்ப்பணம் செய்திருந்தனர்.

இந்நிலையில், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம் குறித்த மனுக்களின் பிரதிவாதிகளான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோரே மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரி 100 மில்லியன் ரூபாயையும் பூஜித் ஜயசுந்தர மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாயையும் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாயையும் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவை தமது சொந்த நிதியில் இருந்து நட்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்தே மைத்திரிக்கு எதிராக கட்சிக்குள் எதிர்ப்பாளர்கள் உருவாகி அவரை பதவி விலகுமாறு வலியுறுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு பல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கால அவகாசம் நிறைவடைந்தது



இதேவேளை, சுமார் 20 முக்கிய அரசியல் கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சில அரசியல் கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை கட்சியின் மத்தியகுழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

## உ/த பரீட்சை காலத்தில் மின்வெட்டு இல்லை?

2022ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைகள், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் நாளாந்த மின்சார வெட்டு அமுல்படுத்தப்படக் கூடாது என்று பரீட்சைகள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னர் மற்றும் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் தொடர்ச்சியாக மின் விநியோகத்தை வழங்குமாறு பரீட்சை திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரும் பொறியியலாளருமான ரொஹான் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இன்று (16) நடைபெறும் விசேட கலந்துரையாடலில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் எனவும் இந்த விடயம் குறித்து இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரையையும் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ஒத்துழைப்பை வழங்குமாறு ஆணைக்குழு கோரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனு கோரலுக்கான திகதியை அறிவிப்பதற்கு முன்பிருந்தே சில தரப்பினர் தேர்தல் நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

சில அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பில் முரண்பாடான கருத்துகளை வெளியிட்டமை, கட்டுப்பணம் பொறுப்பேற்பதை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பியமை ஆகிய விடயங்கள் குறித்து பொய்யான தகவல்கள் வெளியிடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் மா அதிபருக்கிடையிலான சந்திப்பு தொடர்பில் சில ஊடகங்கள் போலியான தகவல்களை வெளியிட்டமை உள்ளிட்ட சம்பவங்கள் இவற்றில் உள்ளடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான கருத்துகள் மற்றும் சிக்கல்களை உருவாக்கும் செயற்பாடுகள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு இடையூறாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவதானம் செலுத்தி தேர்தலை உரிய முறையில் தேர்தலை நடத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்து தரப்பினரிடமும் கோரிக்கை விடுப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## கஞ்சா செடி விவகாரம் எதிமால ஓ.ஐ.சி பணிநீக்கம்

600க்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளுடன் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்ட மொனராகலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார பொலிஸ் மா அதிபரால் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட எதிமால ஓ.ஐ.சி சஞ்சய தர்மதாசவும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார, எதிமால பொலிஸ் பொறுப்பதிகாரி தர்மதாச மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சாரதி சசிந்து மதுஷன் உள்ளிட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மொனராகலை மாவட்ட நீதிபதி சஜினி அமரவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முஜிபுரின் எம்.பி பதவி இருவருக்கு சாத்தியம்?




.உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளராக நியமிக்க கட்சி ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சியின் செயற்குழு சனிக்கிழமை (14) கூடியபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவினால் முஜிபுர் ரஹ்மானின் பெயர் முன்மொழியப்பட்டதுடன் அனைத்து செயற்குழு உறுப்பினர்களாலும் அவரது பெயர் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்நிலையில், மேயர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு முஜிபுர் தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்யவுள்ளார்.

அந்த கட்சியின் மகளிர் அணியின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிருணிக்கா அல்லது முன்னாள் எம்.பியான ஏ.எச்.எம். பௌசி ஆகியோரில் இருவர் தெரிவு செய்யப்படுவர் என்று தெரியவருகிறது.

## தைப்பொங்கல் ஒரு முன்னுதாரண பண்டிகை

பூஜை வழிபாடு செய்து விளைச்சல் செழிப்பை தருவதற்கு நன்றியைத் தெரிவிப்பதும் இங்கு அடிப்படையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.

பரிசுத்தம், நன்றியுணர்வு, சௌபாக்கியம், மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையை உருவாக்கும் தைப்பொங்கல் உற்சவம் புராண காலத்திலிருந்து இந்து மக்கள் விழாவாக கொண்டாடுவதை நாமனைவரும் அறிந்து வைத்துள்ள ஓர் விடயம் என்றும் தெரிவித்தார். சூரிய கடவுளு நன்றி பாராட்டுதல், இயற்கைக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் தமது நன்றியுணர்வை வெளிக்காட்டும் ஓர் உன்னத சந்தர்ப்பமாகும் என்பதோடு விவசாய செய்கைகளை மேற்கொள்ளும் மக்களுக்கு இது மிகுந்த உற்சாகத்தை வழங்கும் பண்டிகையாகவும் அமைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு இந்துக் கல்லூரி,கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,கொழும்பு சைவ மங்கையர் கல்லூரிகளின் மாணவ மாணவிகளின் கலையம்ச அரங்கேற்றங்களும் இதில் இடம் பெற்றன.

## 15 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நேற்று (15) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

தற்போது 117 இலங்கை பணிப் பெண்கள் ஓமானில் உள்ள பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 17 பேர் இலங்கைக்கு அனுப்புவதற்காக ஓமானில் உள்ள மஸ்கட் விமான நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

எனினும், 17 பேரில் ஆவணச் சிக்கல்கள் காரணமாக இருவரை மஸ்கட் விமான நிலைய அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்றும் அதனை அடுத்து 15 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

குறித்த வீட்டுப் பணிப்பெண்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குழுவும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்து இக்குழுவினரை வரவேற்றனர்.

கடந்த வாரமும், பாதுகாப்பு இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு பெண்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஓமானின் பாதுகாப்பு இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 118 இலங்கை பணிப்பெண்களில் 67 வயதான பெண்ணொருவர் அண்மையில் சுகயீனம் காரணமாக உயிரிழந்ததாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்திருந்தது.

## மத தலைவர்களை சந்தித்து ஆசி பெற்றார் ஜனாதிபதி

அதன் பின்னர் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாராதிபதி வணக்கத்துக்குரிய மீகஹஜந்துரே சிரிவிமல நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்த ஜனாதிபதி, அவரின் உடல் நலன் குறித்தும் கேட்டறிந்ததோடு சிறிது நேரம் அவருடன் உரையாற்றினார்.அதனை தொடர்ந்து நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரால் செத்பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கப்பட்டது.

“பௌத்த இந்து சமய மன்றம்” சார்பில் ஜனாதிபதியை அதன் தலைவர் கலாநிதி எம்.மோகன் வரவேற்றார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் , நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமியை சந்தித்து ஆசி பெற்றார்.

அடுத்து யாழ் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி , யாழ்.ஆயர் கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை சந்தித்து சிறிது நேரம் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.





## இந்தி மொழி இருக்கை ஸ்தாபிக்க ஒப்பந்தம்

அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.எம்.யு.எஸ்.கே. ரத்நாயக்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோரால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்திய உயர் ஸ்தானிகர் பாக்லே கடந்த 11ஆம் திகதி பெலிஹுலோயாவில் உள்ள சப்ரகமுவ பல்கலைக் கழகத்துக்கு முதன்முதலாக விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்திய பேராசிரியர்களும் இப்பல்கலைக் கழகத்தில் இந்தி மொழிக் கற்கைநெறியினை கற்பிக்க வழிசமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் இந்திமொழி இருக்கையில் சிறந்த பெறுபேறுகளைப்பெறும் மாணவருக்கு உயர் ஸ்தானிகரின் தங்கப்பதக்கம் வழங்கப்படுமெனவும் உயர் ஸ்தானிகர் இங்கு அறிவித்திருந்தார்.

மேலும், கண்டியில் உள்ள உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் இணைந்து இப்பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட இந்தி கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களும் உயர் ஸ்தானிகரால் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக விஞ்ஞான மற்றும் மொழிகளுக்கான சர்வதேச மாநாட்டிலும் உயர் ஸ்தானிகர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

புலமையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டில் சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் குறித்த தமது ஆய்வுகளை அவர்கள் சமர்ப்பிக்கமுடியும். அத்துடன் இந்த மாநாட்டுக்கான இணையசேவையும் உயர் ஸ்தானிகர் மற்றும் துணைவேந்தரால் இந்நிகழ்வின்போது ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர், ஸ்திரத்தன்மை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் இந்தியாவின் சாதனைகளை பட்டியலிட்டிருந்தார்.

அத்துடன் பிரதமர் நரேந்திர மோடியின் கருத்துக்களை மேற்கோளிட்டு உரையினை தொடர்ந்த அவர் மீள்பாவனை, மீள்சுழற்சி, மீள்வடிவமைப்பு, மீள்பயன்பாடு, மீளுற்பத்தி போன்றவை இந்தியாவின் கலாசார நெறிமுறையின் அங்கங்களாக ஸ்திரத்தன்மையினை நோக்கிய பயணத்தில் எவ்வாறான முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கின்றது என்பது தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கையில் அபரிமிதமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய அவர், ஸ்திரமான எரிசக்தி மூலங்களிலிருந்து அதிக சக்தியை உற்பத்தி செய்வதற்காக இந்தியா இலங்கையில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாமல், இப்பல்கலைக்கழகத்திற்கு உயர் ஸ்தானிகராலயத்தின் தொடர்ச்சியான ஆதரவையும் அவர் உறுதியளித்தார்.

இந்தியா இலங்கை இடையிலான ஒத்துழைப்பில் கல்வி மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. அண்மையில் மெட்ராஸ் இந்திய தொழில்நுட்பக் கழகம் தனது முதுமாணிக்கற்கை நெறிகளை இலங்கை தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்துள்ளது.







# யாழ். சிறைச்சாலையில்




உழவர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகை ஞாயிற்றுக்கிழமை (15) யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர் கே.வி.ஏ. உதயகுமார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதான ஜெயிலர் எச்.எம்.டி. ஹேரத் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். (நிதர்ஷன் வினோத்)





# கந்தளாயில்

தைப்பொங்கள் தினத்தினை முன்னிட்டு கந்தளாய் மக்கள் தங்களது வீடுகளிலும் மற்றும் சோழீஸ்வர சிவன் கோவில் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகளில் ஞாயிற்றுக்கிழமை (15) ஈடுபட்டனர்.

எப். முபாரக்







# நீர்கொழும்பில்

நீர்கொழும்பு வாழ் இந்து மக்கள், தைப்பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாடினர். கடற்கரை தெரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கிருபாகரன் சர்மா சிவாச்சாரியார் தலைமையில் விசேட பூஜைகள் இடம்பெற்றன. இதில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

எம். இஸட். ஷாஜஹான்









கொழும்பு, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் (சிவன் ஆலயத்தில்) இடம்பெற்ற வழிபாடுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் (குஷான் பத்திராஜ்)




# திருக்கோவிலில்

திருக்கோவில் பிரதேச செயலக பொங்கல் விழா, பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் வெள்ளிக்கிழமை (13) கோலாகலமாக இடம்பெற்றது.

வி.ரி. சகாதேவராஜா





# காரைதீவில்



தமிழர்களின் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (15) காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் பெருந்திரளான பக்தர்களுடன் சிறப்பு பூஜை இடம்பெற்றது.

வி.ரி. சகாதேவராஜா









# திருகோணமலையில்...

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் மாபெரும் சக்தி பொங்கல் நிகழ்வு சனிக்கிழமை (14) இடம்பெற்றது.

இந்நிகழ்வு, அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலத்தில் இடம்பெற்றது.

(அ. அச்சுதன்)

# முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்



■ க. அகரன்

உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது; ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளை கண்டறியவும் எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காக்க கோரியும், வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர்ச்சியான போராட்டத்தின் 2,156 நாளாக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளே இவ்வாறு தெரிவித்தனர்.

'பண்டைய தமிழ் இறையாண்மை பொங்கல் வேண்டும் வேண்டும்' என தெரிவித்து இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்தும் அங்கு கருத்து தெரிவித்த கோ. ராஜ்குமார், இரண்டு முக்கிய இராணுவ மேஜர்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் பயணத் தடையுடன் வேறு பல நிபந்தனைகளை விதித்தது. சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர், இலங்கையின் முன்னாள் இரண்டு ஜனாதிபதிகளுக்கு கனடா தடை விதித்தது.

இந்த இரண்டு ஜனாதிபதிகளுடன் தொடர்புள்ள எந்தவொரு கனடியர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. இவையெல்லாம் நம் மக்களுக்கு என்ன சொல்கின்றன? உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது. ஆனால், முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை. எமது தாய்மாருடன் இணைந்து, தமிழ் இறையாண்மைக்காக யாரேனும் ஒருங்கிணைத்து குரல் கொடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.

அமெரிக்காவுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்துமாறு, எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்துகிறோம். கொழும்பை கண்டு பயந்தால் அமெரிக்காவிடம் பேசுங்கள்.

சீன ஆதிக்கத்தை ஒடுக்க அமெரிக்கத் தலைமையுடன் இந்தியப் பெருங்கடலைப் பாதுகாக்கும் நாடுகள் 'குக்' தீவுகளுக்கு இறையாண்மையை வழங்கின. இங்கும் இறையாண்மைக்கான வலுவான சாத்தியம் உள்ளது என தெரிவித்தார்.




# பரிசளிப்பு விழா

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாலிநகர் மகா வித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா வெள்ளிக்கிழமை (13) பிரமாண்டமாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ரி. சிறீகமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் ரி. சத்தியமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக துணுக்காய் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த. தமிழழகனும் கௌரவ விருந்தினர்களாக பாடசாலை முன்னாள் அதிபர்களும் கலந்து கொண்டனர்.





## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

# யாழ். பல்கலையினுள் வீதி நாடகம்

■ நிதர்சன் வினோத்

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருடன் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் இணைந்து வீதி நாடகத்தை யாழ். பல்கலைக்கழகத்தினுள் முன்னெடுத்தனர்.

வெள்ளிக்கிழமை (13) யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூட வளாகத்துக்கு முன்பாக குறித்த வீதி நாடகம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன், இந்த முறை தைப்பொங்கலுக்கு எமது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்பிய பொழுதும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இம்முறையும் எமது உறவுகள் இன்றி, பொங்கலை பொங்கமுடியாத சூழலை வெளிப்படுத்துமுகமாக இதனை நாம் நாடகமாக நிகழ்த்திகாட்டியிருந்தோம்.



## சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன்

# இலவசமாக அறுவடைக்குரிய டீசல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி பிரதேச விவசாயிகளுக்கு சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அறுவடைக்குரிய டீசல் இலவசமாக வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு ஹெக்டேருக்கு குறைவான அளவில் விவசாயம் மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு, அறுவடைக்குரிய டீசல் வழங்கும் வைபவம், பூநகரி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது

**“ மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா. தேவரதன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்**

இதில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துல சேன, மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா. தேவரதன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## வவுனியா கடைகளில் நான்கு இலட்சத்துக்கு மேல்

# தண்டப்பணம் அறவீடு

■ க. அகரன்

வவுனியா மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் இருந்து நீதிமன்றத்தின் ஊடாக நான்கு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் 01.09.2022 தொடக்கம் 15.10.2022 வரையான காலப்பகுதியில், 66 வர்த்தக நிலையங்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் சோதனை செய்யப்பட்டன. அதில் முறையாக சுட்டுத்துண்டில் தகவல் வழங்காமை தொடர்பாக

## திருகோணமலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

# அனைத்து சபைகளிலும் தனித்து போட்டியிடும்

■ ஹஸ்பர்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம் முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மயில் சின்னத்தில், திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து சபைகளிலும் தனித்து போட்டியிடும் என, மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இறக்கக்கண்டி பிரதேசத்தில் நேற்று (15) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது;

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில் பல பிரச்சினைகள் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ளன. இவ்வாறானவற்றை தீர்க்கவும் பிரதேச பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்ளவும், எமது கட்சி சகல சபைகளளையும் கைப்பற்றுவதற்காக நல்ல பல வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளார்கள்.

காணிப் பிரச்சினை இன்னோரன்ன பல பிரச்சினைகள் உள்ளன. இதனை கருத்திற்கொண்டு ஆட்சியை கைபற்றுவதன் ஊடாக, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஊடாக மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.





## அம்பாறை முதல் அறுகம்பை வரை:

# விழிப்புணர்வு சைக்கிள் பவனி

■ வி.ரி சகாதேவராஜா

மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு சைக்கிள் பவனி, அம்பாறை பொது வைத்தியசாலை ஏற்பாட்டில், அம்பாறை தொடக்கம் பொத்துவில் அறுகம்பை வரை நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

அம்பாறை பொது வைத்தியசாலை ஊழியர்கள், படையினர் இணைந்து மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்று நோய், நீரழிவு, இதயநோய், உயர் இரத்த அழுத்தம், சீறுநீரகநோய்கள், புற்றுநோய் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்தச் சைக்கிள் பவனி இடம்பெற்றது. அம்பாறையில் இருந்து ஆரம்பமாகிய இப்பவனி இறக்காமம்,டு அக்கரைப்பற்று, ஊடாக திருக்கோவில் பாதை ஊடாக அறுகம்பையை சென்றடைந்தது.

**“ கட்டளைத்தளபதி விபுலசந்திரஶ்ரீ, காஞ்சிரங்குடா படைப் பிரிவின் கட்டளை தளபதி மற்றும் நிர்டவாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா எனப் பலரும் கலந்து கொண்டனர்**

சைக்கிள் பவனியில் பங்குபற்றியவர்களுக்கான தாகசாந்தி, திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஊடாக, காஞ்சிரங்குடா முகாம் படையினரின் உதவியுடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன், கட்டளைத்தளபதி விபுலசந்திரஶ்ரீ, காஞ்சிரங்குடா படைப் பிரிவின் கட்டளை தளபதி மற்றும் நிர்டவாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# தென்னங்கன்றுகள் விநியோகம்

தம்பலகமம் அகில இலங்கை வாலிபர் பேரவையின் ஏற்பாட்டில், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

அகில இலங்கை வாலிபர் பேரவையால், நாடுபூராகவும் முன்னெடுத்து வரும் தென்னங்கன்றுகள் விநியோகிக்கும் விசேட செயற்றிட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு YMMA தம்பலகமம் அமைப்பின் தலைவர் ஏ.எச்.எம் சித்தீக் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதீதியாக அகில இலங்கை YMMA பேரவையின் தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீட்டும் கௌரவ விருந்தினர்களாக YMMA திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் எம்.எம் முக்தார் , City Garden அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அலிஹாஜி சித்திக், தம்பலகமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப் , தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பண்டார, தம்பலகமம் YMMA அமைப்பின் செயலாளர் எம்.பீ.பைஸர் எனப் பலரும் கலந்துசிறப்பித்தனர்.




# வாழ்வாதார மேம்பாட்டுக்காக

## மீன் பிடி உபகரணங்கள் வழங்கி வைப்பு

■ ஹஸ்பர்

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு, சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் மற்றும், கொடுவா மீன் வளர்ப்புக்கான கூடுகள் உள்ளிட்ட 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மொத்தமாக ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வாதார திட்டத்தின் ஊடாக, இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில், இரண்டு மீன் பிடி படகுகள், இரண்டு மீன் பிடி இயந்திரங்கள், மீன்பிடி வலைகள், ஏனைய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இறக்கக் கண்டி, வாலையூற்று, புடவைக் கட்டு மீனவர்களுக்காக கொடுவா மீன்வளர்ப்பு உபகரணங்களும் இதன் போது வழங்கப்பட்டன.



# பொலிஸ் நிலையத்தில் பொங்கல்

■ ஏ.எல்.எம் ஷினாஸ்

பெரியநீலாவணை பொலிஸ் நிலையம், பொலிஸ் நிலையத்தின் ஆலோசனைக் குழு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தைப்பொங்கல் நிகழ்வு, நேற்று (15) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜீ துஸார திலங்க ஜெயலால் தலைமையில் நடைபெற்றது.

பாண்டிருப்பு சிவன் கோவில் குருக்கள் எஸ். தர்மலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற இந்தப் பொங்கல் நிகழ்வி,ல் பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் சாஜித் முனீர் உட்பட ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில்

# ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு தக்க பாடம் புகட்டுவார்கள்

■ எஸ்.கணேசன்

உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஊடாக ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கூறியதாவது,

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இணைந்து போட்டியிடப்போவதாக ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா



பொதுஜன பெரமுன கட்சியும் அறிவித்துள்ளன. இரு கட்சிகளுக்கும் இடையிலான இணைவு என்பது புதிய விடயம் அல்ல. இது ஏற்கெனவே திட்டமிட்ட ஒரு விடயமாகும். இந்த இணைவுக்காகவே ராஜபக்ஷர்கள் ரணிலை ஜனாதிபதியாக்கினர். எனவே, இந்த ரணில் - ராஜபக்ஷ ஆட்சியாளர்களுக்கு தேர்தல் ஊடாக மக்கள் சிறந்த பாடத்தை புகட்டுவார்கள்.

வரும்.... ஆனா வராது...

என்ற நிலையிலேயே தேர்தல் உள்ளது. ஏனெனில் தேர்தலை ஒத்திவைப்பதற்காக பல வழிகளிலும் ஆட்சியாளர்கள் முயன்று வருகின்றனர். எது எப்படி இருந்தாலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதே நிலைப்பாட்டில்தான் தேர்தல் ஆணைக்குழுவும் உள்ளது. நீதிமன்றத்தில் சில மனுக்கள் உள்ளன. எனவே, உயர்நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை காத்திருப்போம்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும். அடுத்தவாரம் எமது பட்டியல் கையளிக்கப்படும். 75 சதவீத இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியே வெற்றிபெறும் என்றார்.






## இந்த வருடத்துக்கான முதலாவது செயற்றிட்டம்

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் 2023ஆம் ஆண்டுக்கான முதலாவது செயற்றிட்டம், கண்டி, வத்தேகம பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது, மாணவர்கள் பயன்பாட்டிற்காக மேசை, கதிரைகளுடன், ஆண்டு ஐந்து புலமைப்பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## நுவரெலியா மாவட்டத்தில்

### அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன

■ சுதத்.எச்எம்.ஹேவா

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பல உள்ளூராட்சி மன்றங்களுக்கு இதுவரை (14) ஆறு அரசியல் கட்சிகளும் இரண்டு சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கே. எல். எஸ்.களுகம்பிடிய தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி ஆகியன இணைந்து கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளன.

மேலும், ஹட்டன் -டிக்கோயா நகரசபை, மஸ்கெலியா, நோர்வூட், அம்பகமுவ, ஹங்குரன்கெத்த, வலப்பனை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியும், அம்பகமுவ உள்ளூராட்சி சபைக்கு புதிய ஜனநாயக முன்னணி, மஸ்கெலியா உள்ளூராட்சி சபைக்கு சோசலிச சமனதா கட்சி, கொட்டகலை உள்ளூராட்சி சபைக்கு இரண்டு சுயேட்சை குழுக்களும் பணத்தை செலுத்தியுள்ளன என்றார்.


## ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணத்தை செலுத்த

### ஸ்ரீ.ல.சு.கட்சி தயாராகி வருகிறது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

இவ்வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக, நுவரெலியா தேர்தல் தொகுதிக்குட்பட்ட ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை இந்த மாதம் 17ஆம் திகதியும் வேட்பு மனுவை இந்த மாதம் 18ஆம் திகதியும் தாக்கல் செய்யவுள்ளதாக , ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா பிரதம அமைப்பாளர் சதானந்தன் திருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தெரிவித்தஅவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நுவரெலியா நகரசபை, தலவாக்கலை- லிந்துல நகரசபை, நுவரெலியா, அகரபத்தனை, கொட்டகலை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஹெலிகொப்டர் சின்னத்தின் கீழ் தற்போது தயாராகி வருகிறது. இந்த வேட்பாளர் குழுக்கள் பலம் வாய்ந்த வேட்பாளர்களைக் கொண்டுள்ளதாகவும் இதற்கமைய, இந்த உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை தமது கட்சி கைப்பற்றும் என்றார்.



## ஆவேலியாவில்

நுவரெலியா, ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று (15) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தைப்பொங்கல் விசேட பூஜையின் பின் அங்கு நடைபெற்ற சுவாமிகள் உள் வீதி ஊர்வலத்தை படங்களில் காணலாம். ( எஸ். கே. குமார்)





## மலையகத்தில் தைப்பொங்கல் திருநாள்...

தைப்பொங்கல் தினமான நேற்று (15) மலையகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டதுடன், மலையக ஆலயங்களில் சிறப்பு பூஜை வழிபாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (மலையக நிருபர்கள்)























# நெருக்கடிகளுக்கு மத்தியில் பிரம்மாண்ட கொண்டாட்டங்கள் அவசியம்தானா?

நாட்டில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி மக்களை வாட்டிவதைக்கும் சூழ்நிலையில், நாட்டு நிர்வாகத்திலும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை, கடந்த வாரங்களில் அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ளவர்கள் வெளியிட்டிருந்த கருத்துகளினூடாக உறுதி செய்து கொள்ள முடிந்தது.

குறிப்பாக, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது, பந்துல குணவர்தன, அரசாங்க ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலும், ஓய்வூதியம், சமுர்த்திக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலும் அரசாங்கம் கடும் சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும், இதனால் சகல அமைச்சுகளுக்கும் இந்த ஆண்டுக்காக வரவு - செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கிய நிதியிலிருந்து ஐந்து சதவீதத்தை மீளப் பெறுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வரும் நிலையில், தேர்தலை நடத்தினால் அது உலக சாதனையாக அமைந்திருக்கும். தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் நிதி இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அதுபோலவே, அரசாங்கம் நாட்டுக்கு அவசியமான எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றை கொள்வனவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவற்றினூடாக, நாட்டின் பொருளாதாரம் எந்தளவு நெருக்கடி நிலைக்கு முகங்கொடுத்துள்ளது என்பதை அனுமானித்துக் கொள்ளக்கூடியதாக உள்ள நிலையில், கொழும்பு, காலி முகத்திடலுக்கு முன்பாக கடந்தவாரம் முதல் வீதியோரத்தில் தற்காலிக கூடார மேடை அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. என்னவென்று விசாரித்த போது, 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக தயார்படுத்தப்படுவதாக அறிந்து கொள்ள முடிந்தது.

நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், இக்காலப்பகுதியில் நாட்டு மக்கள் மிகவும் மோசமான நிதி நெருக்கடிகளுக்கும், இன்னல்களுக்கும் முகங்கொடுக்கும் காலப்பகுதியாக 74 ஆவது சுதந்திர தினத்திலிருந்து, இதுவரையான சுமார் ஒருவருட காலப்பகுதியை குறிப்பிட முடியும். இவ்வாறிருக்கையில் சுமார் 20 கோடி ரூபாயை செலவிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து இந்த நாடு தற்போது இருக்கும் நிலையைப் பார்க்கையில், மக்களுக்கு இன்னல்கள் அதிகமாக உள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில், வரிக்கு வரி விதித்து, மக்கள் மீது சுமைக்கு சுமை ஏற்றப்பட்டுள்ள காலகட்டத்தில் 20 கோடி ரூபாய்க்கு பிரம்மாண்டமாக சுதந்திரதின வைபவம் ஏற்பாடு செய்யத்தான் வேண்டுமா, யாருக்காக இந்த வைபவம்?

இந்த நிதியைப் பயன்படுத்தி, கிராமத்தில் ஒரு வேளை உணவின்றி வாடும் எத்தனை ஜீவன்களை வாழ வைக்க முடியும். நிதி நெருக்கடியான காலப்பகுதியில், மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய அரசாங்க தலைமைகள் இவ்வாறு கண்களை மூடி, கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்யத்தான் வேண்டுமா? இதற்குமட்டும் எங்கிருந்து நிதி? இவ்வாறான பல கேள்விகள் சாதாரண மக்கள் மத்தியில் எழாமல் இல்லை.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தன்னம்பிக்கையை உடைக்கும் நபர்களுடன் நட்பைக் கொள்ளலாகாது. ஒருவரை வீழ்த்த தவறான ஆலோசனை சொல்லும் நபர்கள், மிகச் சிறிய விடயங்களைக் கூட, பெரிதாய் பேசுவார்கள். இவர்களின் பேச்சை நம்பியவர்கள் கோளைகளாகி விடுவார்கள்.

எங்களை நாங்களே செதுக்கி, முழு மனிதனாக மாறவேண்டும். பரந்த உலகில் பற்பல சாதனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. படிப்படியாக முன்னேறினால், எவரும் முன்னேற்றத்தைக் கைப்பற்றி விடலாம். இது புதுமையில்லை.

தனது கடமைகளை ஒழுங்காகச் செய்துவர வேண்டும். உற்சாகமாகக் கடமைபுரிபவன், பெரிய விடயங்களையும் எளிதாகச் செய்துமுடிக்கிறான்.

இளமையில் செய்யும் கருமங்கள், முதுமையிலும் வளர்ந்து, உயர்நிலைக்கு உயர்த்தி விடுகின்றன.

வளர்ச்சி என்பது, இளமையில் இருந்தே எழுவதாகும். இதனால், முதுமையிலும் இளமையின் வேகம் மழுங்காது.

எதற்கும் தயார் நிலையில் வாழ்பவனே உறுதியான மனிதன்.

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

# கூட்டமைப்பு ‘டமால்’



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

உருவாகிய நாளிலிருந்தே முரண்பாடுகளுக்கும் பிரிவுகளுக்கும் குறையில்லாததாகத்தான் ‘தமிழ்த் தேசிய கூட்டமைப்பு’ இருந்து வந்திருக்கிறது.

பொதுவாக நிலவும் நம்பிக்கைகள் பல உண்மையாக இருப்பதில்லை. சிலவேளைகளில் அவை வசதியான பிரசாரத்தின் விளைவாக, உண்மைக்குப் புறம்பாக சமூகத்தில் விதைக்கப்படுபவையாகக் கூட இருக்கலாம். அதில் ஒன்றுதான் கூட்டமைப்பை, விடுதலைப் புலிகள் உருவாக்கினார்கள் என்பதாகும்.

கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கவில்லை. அப்படிச் சொல்வது அதன் உருவாக்கத்துக்காகப் பாடுபட்டவர்களுக்கு செய்கிற அநீதி. கூட்டமைப்பு என்பது அதன் உருவாக்கத்துக்குப் பின்னர், தமக்கான அரசியல் சந்தர்ப்பம் கருதி விடுதலைப் புலிகளால் தத்தெடுக்கப்பட்ட ஒன்றாகும். கூட்டமைப்பின் ஸ்தாபகக் கட்சிகளாக தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியன இருந்தன.

இதில் கவனிக்கப்பட வேண்டியது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஸ்தாபகக் கட்சியில் இலங்கை தமிழரசுக் கட்சி கிடையாது. புலிகள் கூட்டமைப்பை ‘தத்தெடுத்த’ பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி, 2004இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரிலும், சின்னத்திலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போட்டியிட அனுமதிக்கவில்லை. அதன் பின்னர்தான், ஆனந்த சங்கரியோடு இணைந்து செல்லாது கூட்டணியினர், இலங்கை தமிழரசுக் கட்சிக்கு மீண்டும் உயிர்கொடுத்து, ‘வீட்டு’ச் சின்னத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தொடர்ந்து இயங்கினர்.

அதன் பின்னர் சில கட்சிகள் விலகின; சில கட்சிகள் இணைந்தன. ‘நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை’ உலகுக்கு மட்டுமல்ல, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இருக்கிறது என்றால் அது மிகையல்ல. நேற்று கூட்டமைபிலிருந்ததொரு கட்சி, இன்று இருக்காது. இன்று இருக்கும் கட்சி, நாளை இருக்காது என்பதுதான் கூட்டமைப்பின் கதையாக இருந்து வருகிறது.

இன்று கடைசியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சின்னமாகவும் முகமாகவும், முகவராகவும் இருந்த தமிழரசுக் கட்சி, நேரடியாக அன்றி மறைமுகமாக கூட்டமைப்பிலிருந்து விலகி, தனிவழி செல்கிறது. இலங்கை தமிழரசுக் கட்சி, எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிடவுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் ஊடகங்களுக்கு அறிவித்ததோடு தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து விலகாமல் விலகியிருக்கிறது.

தமிழரசுக் கட்சி ஏன் விலகியது என்பதற்கு ஆயிரம் வியாக்கியானங்கள் கற்பிக்கலாம். ஆனால், யதார்த்தத்தில் தமிழரசுக் கட்சி - கூட்டமைப்பு என்ற கூட்டணி மனப்பான்மையில் செயற்பட்டு பல ஆண்டுகளாகிறது. 2009 வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பை கட்டுப்படுத்தும் கையாக விடுதலைப் புலிகள் இருந்தார்கள்.

2009க்குப் பின்னர், தமிழரசுக் கட்சியை கட்டுப்படுத்தும் சக்தி ஒன்று இருக்கவில்லை. தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள் ‘நாட்டாமை’யாகச் செயற்பட்டது என்று சொன்னால் அது மிகையல்ல. அந்த நாட்டாமையை விரும்பாத கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள், கூட்டமைப்பிலிருந்து தனிவழி போயின. மற்றைய அங்கத்துவக் கட்சிகள், தமது பதவிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பல்லைக்கடித்துக்கொண்டு இருந்தன.

கூட்டமைப்பின் தீர்மானங்கள், முடிவுகள், நிலைப்பாடுகள் என பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட பல முடிவுகள், கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளோடு பேசாமல், தமிழரசுக் கட்சி சார் தனிநபர்களால் எடுக்கப்பட்ட முடிவுகளே என்ற குற்றச்சாட்டுகள் கூட முன்வைக்கப்பட்டன. ‘கூட்டமைப்பு’ என்ற பெயரில் வெளிநாடுகளுக்குப் போவது, இராஜதந்திரிகளைச் சந்திப்பது, அரசாங்க முக்கியஸ்தர்களைச் சந்திப்பது என எல்லாம் தமிழரசுக் கட்சியின் தனிநபர்களால்தான் நடத்தப்பட்டன என்பது பகிரங்க இரகசியம்!

இதையெல்லாம் கூட்டமைப்பில் தொடர்ந்திருந்த கட்சிகள் பொறுத்துக் கொண்டதற்கு ஒரேயொரு காரணம்தான் இருக்க முடியும். அது, அவர்கள் தேர்தலில் ஒன்றிரண்டு ஆசனங்களையேனும் வெல்வதற்கு தமிழரசுக் கட்சியுடனான தேர்தல் கூட்டு அவசியம் என்பதாகும். தமிழரசுக் கட்சிக்கும் இது நன்றாகவே தெரியும். அதனால்தான் எதுவித தயக்கமுமின்றி தமிழரசுக் கட்சி ‘நாட்டாமை’யாகச் செயற்பட்டு வந்தது.

தமிழரசுக் கட்சியுடனான தேர்தல் கூட்டான கூட்டமைப்பிலிருந்து பிரிந்த கட்சிகள் மற்றும் தரப்பினது தேர்தல் செயற்றிறன் கணிசமாகக் குறைந்தது என்பது தெளிவு. சீ.வி விக்னேஸ்வரனாலும், வியாழேந்திரனாலும் கூட்டமைப்பிலிருந்து பிரிந்தாலும், பாராளுமன்ற தேர்தலில் வெல்ல முடிந்தது. ஆனால், இது தனிநபர் வாக்குவங்கி சார்ந்த விதிவிலக்கு. இவர்களால் அடுத்தமுறை இதே வெற்றியை மீளடைய முடியுமா என்பதும் கேள்விக்குறியே.

ஆனால், 2010இல் கூட்டமைப்பிலிருந்து பிரிந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், மீண்டும் பாராளுமன்ற ஆசனங்களை வெல்ல 10 வருடங்களானது. ஈ.பி.ஆர்.எல்.எஃப், தமிழர் விடுதலைக் கூட்டணியால் கூட்டமைப்பிலிருந்து விகிய பின்னர் தலையெடுக்க முடியவில்லை. இந்த யதார்த்தம் தமிழரசுக் கட்சியினருக்கும் தெரியும். இதுவும் அவர்களது செருக்குக்கு முக்கிய காரணமாகும்.

மேலும், இதே காலப்பகுதியில், தமிழரசுக் கட்சிக்குள் கூட்டமைப்பு தேவையில்லை; நாம் தனித்துச் செயற்படுவோம் என்ற குரலும் உருவாகத் தொடங்கியது. இவற்றின் தொடர்ச்சியாக, இன்று 2001இற்குப் பின்னர் முதன்முறையாக, தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இல்லாமல் ஒரு தேர்தல் நடக்கவிருக்கிறது.

கூட்டமைப்பை உடைக்கவேண்டும், தமிழர் ஒற்றுமையைச் சிதைக்க வேண்டும் என கங்கணங்கட்டிக்கொண்டிருந்த எல்லாத் தரப்புகளுக்கும் அவர்கள் விரும்பிய அடைவு கிடைக்கப்பெற்றுவிட்டது. சினிமா மொழியில் சொன்னால், கூட்டமைப்பு ‘டமால்’.

ஆனால், தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து விலகி, கூட்டமைப்பின் சின்னமாக இருந்த தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தை தான் எடுத்துக் கொண்டு போன பின்னர், கூட்டமைப்பில் எஞ்சியிருந்த டெலோ, புளொட் ஆகிய கட்சிகளும், கூட்டமைப்பின் முன்னாள் அங்கத்தவரான ஈ.பி.ஆர்.எல்.எவ்உம், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியனவும் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் ‘குத்துவிளக்கு சின்னத்தில் ஒன்றாகியிருக்கின்றன.

இந்தக் கூட்டணியில் இணையாமல் சீ.வி விக்னேஸ்வரனும், அவரோடு கைகோர்த்திருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து பிரிந்த மணிவண்ணனும் தனிவழி பயணிப்பதாகத் தெரிகிறது. ஆகவே, தமிழ்த் தேசிய அரசியலில் முழுமையானதோர் ஒற்றுமையை ஏற்படுத்த இன்னமும் முடியாமல் இருக்கிறது.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுதல் அவசியமாகிறது. இந்தப் பிரிவுக்கு தமிழரசுக் கட்சி காரணமல்ல என்று வியாக்கியானப்படுத்த இங்கு பெரும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. புதிதாக ஜனநாயக கூட்டமைப்பாக இணைந்திருக்கும் கட்சிகளை ‘வங்குரோத்து’ அரசியலாக வரைவிலக்கணப்படுத்த கடும் பிரசார பிரயத்தனங்களை தமிழரசுக் கட்சி சார் தரப்பு முன்னெடுப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இது, கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சிதைத்தது யார் என்ற கேள்வியை மீளஎழுப்ப வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கிறது.

கூட்டமைப்பாக, ஒன்றுபட்டு நிற்கும் டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியனதான் ஒற்றுமையைச் சிதைக்கின்றனவா, அல்லது தமிழ் மக்களின் அடையாள பிரதிநிதியாக இருந்த ‘கூட்டமைப்பை’ விடுத்து, நாம் தனியாகப் போட்டியிடுவோம் என்று அறிவித்த தமிழரசுக் கட்சி, ஒற்றுமையைச் சிதைத்திருக்கிறதா என்பதை தமிழ் மக்கள் தமக்குத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஒரு கூட்டணி என்றால், அதற்குள் விட்டுக்கொடுப்புகள் தேவை. விட்டுக்கொடுப்பு இல்லாமல் ஒற்றுமை என்பது சாத்தியமில்லை. ஒரு கூட்டணிக்குள் ஒருவர் நாட்டாமை நடத்திக்கொண்டிருப்பது கூட்டணிக்கு ஆரோக்கியமானது அல்ல. அன்று எப்படி ஆனந்த சங்கரி கூட்டமைப்பின் சின்னத்தை எடுத்துக்கொண்டு வெளியேறினாரோ, அதுபோல இன்று தமிழரசுக் கட்சி கூட்டமைப்பின் சின்னத்தை எடுத்துக்கொண்டு வெளியேறியிருக்கிறது.

ஆகவே, கூட்டமைப்பின் பிளவுக்கு மற்றைய கூட்டணிக் கட்சிகளை குற்றம் சுமத்துவது தர்மமாகாது. ஆனால், தமது தெரிவு யார் என்பது தற்போது தமிழ் மக்களின் கையில்தான் இருக்கிறது. ஒற்றுமை தேவையில்லை; எமக்கு ஒரு கட்சிதான் வேண்டும் என்று தமிழ் மக்கள் எண்ணி, அதற்கு அங்கிகாரம் அளிப்பார்களேயானால், தமிழ் மக்கள் விரும்பித் தெரிந்தெடுத்த வழி அதுதான் என்று எடுத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை தேசிய அரசியலுக்கான மக்களாணையாகக் கொள்ளவும் முடியாது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவும் வேண்டும். ஆனால், அது வாக்குவங்கியின் அசைவையும், ஊடாட்டங்களையும் மேலோட்டமாக உணர்த்தும். அடுத்த பாராளுமன்றத் தேர்தல்தான், தமிழ்த் தேசிய அரசியலின் அடுத்த கட்டத்தை தீர்மானிப்பதாக அமையும். தமிழ் மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்களா, இல்லையா என்பதை வெளிப்படுத்தவேண்டியது தமிழ் மக்கள்தான்!

## கடிதங்கள்

### முள்ளிவாய்க்காலில் நீண்டதூரம் நடந்து செல்லும் மாணவர்கள்



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் மாணவர்கள் வெகுதூரம் பாடசாலைக்கு நடந்து சென்று வருவதாக பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது. முள்ளிவாய்க்கால் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம், முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் உள்ளது. இப்பாடசாலையில் ஒன்று தொடக்கம் 11ஆம் வகுப்பு வரையான வகுப்புகள் உள்ளன.

முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் ஆரம்ப பாடசாலை ஒன்று உள்ளது. இடைநிலை வகுப்புகளுக்கு முள்ளிவாய்க்கால் மேற்குக்கே மாணவர்கள் வர வேண்டி உள்ளது. இதன் காரணமாக, மாணவர்கள் நீண்ட தூரம் பாடசாலைக்கு நடந்து வருவதாகவும் உதவி அமைப்புகள் சைக்கிள்களை வழங்குவதற்கு முன் வர வேண்டும் எனவும் பாடசாலை நேரத்தில் பஸ் சேவைகள் நடைபெறுமானால் மாணவர்கள் பஸ்களையும் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு, கிழக்கு மாணவர்கள் பாடசாலை செல்வதற்கே நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். வறுமை நிலையில் உள்ள மாணவர்கள், பாடசாலையில் இருந்து இடை விலகும் அபாயம் கூட, போக்குவரத்து நெருக்கடியால் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், வலயக் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்




# தாமரை கோபுரத்தில் டயலொக் Future Zone அறிமுகம்

தாமரை கோபுரத்தின் முதல் தளத்தில் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அண்மையில் திறந்திருந்த அதிநவீன, புத்தாக்கங்களை மையமாகக் கொண்ட - *Dialog Future Zone* இல் (டயலொக் எதிர்கால வலயம்) காணப்படும் அதிநவீன தொழில்நுட்பங்களை அனுபவிப்பதற்கு அனைத்து இலங்கையர்களுக்கும் டயலொக் அழைப்பு விடுத்துள்ளது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த *Dialog Future Zone* திறந்திருக்கும்.

*Dialog Future Zone* பார்வையாளர்களுக்கு 5G, இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) மற்றும் வேர்ச்சுவல் ரியாலிட்டி (Virtual Reality - VR) போன்ற நவீன வசதிகளை அனுபவிக்கும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. டயலொக்கின் தற்போதைய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் ஆகியனவற்றை உள்ளடக்கூடிய ஸ்மார்ட் நகரங்களின் வளர்ச்சி மற்றும் நிலையான ஆற்றல் தீர்வுகளை செயல்படுத்துதல் போன்ற முன்முயற்சிகள் பற்றியும் பார்வையாளர்கள் இங்கு அறிந்து கொள்ள முடியும்.

“*Dialog Future Zone* ஐ பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம் மற்றும் தொழில்நுட்பத்தின் எதிர்காலம் பற்றிய ஒரு பார்வையும் அவர்களுக்கு நாம் வழங்குகின்றோம்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், “டயலொக்கில் சாத்தியமானவற்றின் எல்லைகளை நோக்கியவாறு தொடர்ந்தும் நாம் முன்நோக்கி கொண்டு செல்கின்றோம், மேலும் *Dialog Future Zone* என்பது புதுமை மற்றும் முன்னேற்றத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும். இந்தக் கண்காட்சி அதை பார்வையிடும் அனைவருக்கும் ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் கற்றலை ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பிற பங்காளர்களுடன் இணைந்து பயிலரங்குகள், விரிவுரைகள் மற்றும் கல்விச் செயல்பாடுகளையும் இந்த *Dialog Future Zone* வழங்கும். இது மாணவர்களுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் ஏற்றது. இதன் நடவடிக்கைகள் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத் தகைமைகள் மற்றும் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நோக்கிலானதாக அமைந்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

“*Future Zone* பொதுமக்களுக்கு உத்வேகம் மற்றும் கல்விக்கான ஆதாரமாக மட்டுமல்லாமல், தொழில் வல்லுநர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான தளமாகவும் இருக்கும் எனவும் நாங்கள் நம்புகின்றோம்," என வீரசிங்ஹ மேலும் தெரிவித்தார்.

*Dialog Future Zone*, பிந்திய ஸ்மார்ட் ஹோம் மற்றும் இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT) தீர்வுகள், முன்னணி பல்கலைக்கழகங்களின் டயலொக் ‘5G Innovation Centre' சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நிறுவனத்தின் புத்தாக்கப் பிரிவான ‘Innovation Foundry' ஆகியவற்றினால் இயக்கப்படும் புதுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் ஆகியவற்றை கொண்டுள்ளது.

# AIA – பெண்களுக்கு பணிக்கான சிறந்த இடம்

AIA இன்சூரன்ஸ் இலங்கையில் Great Place to Work இல் உள்ள சுயாதீன ஆய்வாளர்களால் தொடர்ச்சியாக 5 வருடங்களாக ‘பெண்களுக்கு பணிக்கான சிறந்த இடமாக' அங்கீகரிக்கப்பட்டதில் பெருமிதம் கொள்கிறது. இது பெண்கள் தங்கள் தொழில் மற்றும் வாழ்வில் செழிக்க அதிக உள்வாங்கல், மேம்பாடு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

பெண்களுக்கான பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதில் AIA மேற்கொண்ட முயற்சிகளுக்காக மற்றொரு விருது வழங்கும் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் Satynmag.com மற்றும் CIMA ஸ்ரீ லங்காவினால் மீண்டும் ஒருமுறை மிகச் சிறந்த மகளிர்; நட்பு பணியிடங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டது. இந்த தனித்துவமான விருது, பணியிடத்தில் பெண்களை ஊக்குவிக்கவும், அதிகாரம் அளிக்கவும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

இந்த விருதுகள் குறித்து AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சத்துரி முனவீர கருத்துத் தெரிவிக்கையில், எங்கள் பணியாளர்கள் அனைவருக்கும் உண்மையிலேயே பாதுகாப்பான மற்றும் வெகுமதி அளிக்கும் பணியிடமாக இருப்பதற்கு நிலையான அங்கீகாரங்களைப் பெறுவதில் நாங்கள் உண்மையிலேயே பெருமைப்படுகிறோம். AIA இல் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் ஆதரவளிக்கும் அர்த்தமுள்ள கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல தசாப்தங்களாக பணியிடத்தில் சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை வளர்த்து வருகிறோம். இன்றைய சமுதாயத்தில் பெண்கள் தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை ஆதரிப்பதற்காக பல சவால்களை ஏற்று பல பாத்திரங்களை வகிக்கின்றனர். இருப்பினும், பெரும்பாலான பெண்கள் தங்கள் தொழிலின் பொறுப்புகளை பாரம்பரிய பாலின பாத்திரங்கள் மற்றும் வீட்டில் அவர்களுக்குத் தேவையான பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்துவது சவாலாக உள்ளது. AIA எப்போதும் இந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்து, சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் பணிச்சூழலை உருவாக்குவதை உறுதிசெய்துள்ளது என குறிப்பிட்டார்.

AIA மனித வளப் பணிப்பாளர் துஷாரி பெரேரா மேலும் தெரிவிக்கையில், ‘நாங்கள் திறமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிறுவனமாக இருக்கும் அதே வேளையில், பெண்களை மேம்படுத்துவதிலும், தகுதியின் அடிப்படையில் அவர்களின் தொழில் வாழ்க்கையில் வெற்றி பெறுவதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். நிறுவனத்தின் பெண் பணியாளர்கள், கவனமாகக் கையாளப்பட்ட பக்கச்சார்பற்ற தொழில் மேம்பாட்டு செயல்முறையின் மூலம் மூத்த தலைமைப் பாத்திரங்களை ஏற்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக இன்று AIA இன் சிரேஷ்ட நிர்வாகத்தில் 21% பெண்கள், நிறுவனத்தின் பெண்களுடன் காப்பீட்டு சிறப்புப் பாத்திரங்களில் 70% செயல்பாடுகளிலும் மற்றும் 63% உண்மையான அளவிலும் காணப்படுகின்றனர்.






அவர் மேலும் குறிப்பிடுகையில் அகைவருக்கும் நியாயமாகவும் மரியாதையுடனும் நடத்தப்படும் மற்றும் அவர்களின் தனித்துவம் கொண்டாடப்படும் கலாச்சாரத்தை பேணுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எனவே, எங்கள் பணியாளர்களில் பலதரப்பட்ட பிரதிநிதித்துவத்தை விரைவுபடுத்துவதற்கான தெளிவான இலக்குகளை நாங்கள் நிர்ணயித்துள்ளோம், மேலும் அவற்றில் சிலவற்றையும் அடைந்துள்ளோம். கடந்த ஆண்டில், பணியாளர்களில் பெண்களின் சதவீதத்தை 41% வரை அதிகரித்துள்ளோம். வெல்த் பிளானர்களின் விற்பனை அணியில் 47% பெண் பிரதிநிதித்துவத்துடன், குறிப்பாக 53% பெண்கள் அதிக செயல்திறன் கொண்ட சிறந்த 100 விற்பனை வெல்த் பிளானர்களில் உள்ளனர், இதுவே பாதிக்கும் மேற்பட்ட புதிய வணிகங்களைக் கொண்டுவருகிறது. இதற்கேற்ப அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் உண்மையாக ஒத்துழைக்கக்கூடிய சூழலை உருவாக்க நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம் என் தெரிவித்தார்.

சென்னை

# உதயநிதியின் தந்தையாக இருப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன்

“உதயநிதியின் தந்தையாக இருப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன்” என தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



சென்னையில் இடம்பெற்ற திராவிட மாடல் பயிற்சிப் பாசறை- 2 மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலி தொடக்க விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”இளைஞர் அணியின் செயற்பாட்டை ஒவ்வொரு நாளும் கவனித்து வருகிறேன்.

3 ஆண்டுகள் இளைஞரணி நிகழ்ச்சியில் தாம் பங்கேற்வில்லை என உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார். மூன்றரை வருடம் இளைஞரணி நிகழ்ச்சிக்கு என்னை ஏன் அழைக்கவில்லை எனத் தெரியவில்லை. உதயநிதியின் தந்தையாக மகிழ்ச்சி அடைகிறேன். தலைவனாக பெருமைப்படுகிறேன்.

சமூக ஊடகங்களிலும் உதயநிதியை கண்காணித்து கொண்டிருக்கிறேன். பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை தி.மு.க இளைஞரணி செயலாளராக உதயநிதி சிறப்பாக செயல்படுகிறார்.

தி.மு.கவில் இருக்கக்கூடிய மற்ற அணிகளை விட இளைஞரணி முதல் அணியாக இருப்பது பாராட்டுக்குரியது. பாராளுமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தலில் கட்சிக்கு வெற்றியை தேடி தந்தார் உதயநிதி. உதயநிதி ஸ்டாலின் ஒரு செங்கல் பிரசாரம் மூலம் மக்கள் மனதில் பல விஷயங்களை பதிவு செய்தார்.

இளைஞர் அணி மூலம் அறிக்கை வெளியிட்டு நீர் நிலைகளை சுத்தம் செய்ய உதயநிதி உத்தரவிட்டார். நீர் நிலைகளை சுத்தம் செய்யும் பணியையும் அவர் நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்தி திணிப்பு, நீட் தேர்வு பிரச்சினையில் இளைஞர் அணி பங்கேற்றதை எண்ணி மகிழ்கிறேன். எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆளும் கட்சி செய்ய வேண்டிய பணிகளை தி.மு.க செய்தது” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினம்

# வந்தே பாரத் ரயில் சேவை ஆரம்பம்

செகந்திராபாத் மற்றும் விசாகப்பட்டினம் இடையேயான அதிவேக ‘வந்தே பாரத் விரைவு ரயிலை‘ பிரதமர் நரேந்திர மோடி நேற்றை தினம் (15) காணொளி காட்சியின் வழியாக காலை 10:30 மணிக்கு தொடங்கி வைத்தார்.

இச்சேவை, இந்திய ரெயில்வே துறையால் இயக்கப்படும் 8ஆவது வந்தே பாரத் விரைவு ரெயில் சேவையாகும். தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களைசுமார் 700 கிலோ மீற்றர் அளவிற்கு இணைக்கும் முதல் ரெயில் சேவை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் ரெயிலானது விசாகப்பட்டினம், ராஜமுந்திரி மற்றும் விஜயவாடா ரெயில் நிலையங்களிலும், தெலுங்கானா மாநிலத்தில் கம்மம், வாரங்கல் மற்றும் செகந்திராபாத் ரெயில் நிலையங்களிலும் நின்று செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பா.ஜ.கவுக்கு எதிராக காயத்ரி நடைபயணம்



பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை நடைபயணம் மேற்கொள்ளவுள்ளதாக காயத்ரி ரகுராம் கூறியுள்ளார்.

பா.ஜ.கவிலிருந்தும் 6 மாத காலத்திற்கு காயத்ரி ரகுராம் நீக்கப்படுவதாக அக்கட்சியின் சார்பில் கடந்த நவம்பர் மாதம் அறிவிப்பு வெளியானது. இதனிடையே பெண்களுக்கு மரியாதை, சம உரிமை இல்லாத தமிழ்நாடு பா.ஜ.கவில் இருந்து வெளியேறும் முடிவை கனத்த இதயத்துடன் எடுக்கிறேன் என்று காயத்ரி ரகுராம் டுவிட்டரில் சமீபத்தில் அறிவித்தார்.

அத்துடன், தமிழ்நாடு பா.ஜ.கவில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும் அண்ணாமலை மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இந்நிலையில் இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள காயத்ரி ரகுராம், பா.ஜ.க பெண்களை அவமானப்படுத்தியதற்காகவும், பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்காததற்காகவும் ஜனவரி 27ஆம் திகதி முதல் சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை நடைபயணம் நடத்தவுள்ளதாக கூறியுள்ளார்.

மேலும் யார் வேண்டுமானாலும் தன்னுடன் இணையலாம் என்றும்,எந்த அச்சுறுத்தலுக்கும் தான் பயப்படவில்லை என்றும் காயத்ரி ரகுராம் குறிப்பிட்டுள்ளார். அரசியலில் உள்ள அனைத்து பாதிக்கப்பட்ட பெண்களுக்காக இந்த நடைபயணம் நடத்துவதாகவும் காயத்ரி ரகுராம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆந்திரா

# விருந்து வைத்து கணவனின் உயிரைப் பறித்த மனைவி



ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர் ராஜு. இவரது மனைவி ஜோதி. இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். ராஜு தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக தனது கணவரைக் காணவில்லை என ஜோதி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இப்புகாரின் பேரில் ஜோதியிடம் பொலிஸார் விசாரணை செய்த போது அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பதில் அளித்துள்ளார்.

இதனால் சந்தேகமடைந்த பொலிஸார் ஜோதியின் தொலைபேசி அழைப்புக்களை ஆய்வு செய்துள்ளனர்.

இதன்போது ராஜுவுக்கு விருந்து வைத்து ஜோதி கொலை செய்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.


அதுமட்டுமல்லாது ராஜுவை திருமணம் செய்து கொள்வதற்கு முன்னதாகவே, ஜோதி வேறு ஒருவரைக் காதலித்து வந்துள்ளார் எனவும் ,திருமணத்திற்கு பின்னரும் அதனை அவர் தொடர்ந்து வந்துள்ளார் எனவும் , வேலைக்கிடைத்துள்ளதாகக் கூறி தினமும் காலையில் தனது வீட்டில் இருந்து சென்று காதலனுடன் பொழுதை கழித்து விட்டு, மாலையில் வீடு திரும்புவதை வாடிக்கையாக வைத்திருந்தார் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவ்விவகாரம் கணவனுக்கு தெரியவரவே குழந்தைகளுக்காக திருந்தி வாழ்வது போல் நடித்து ஜோதி, சம்பவத்தன்று தனது கணவருக்கு வீட்டில் விதவிதமாக சமைத்து அதில் தூக்கமாத்திரையைக் கலந்து விருந்து வைத்துள்ளார் எனவும், அவர் மயங்கியதும் தனது காதலனை அழைத்து, கணவனைக் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

அத்துடன் காதலனின் உதவியுடன் கணவரின் சடலத்தை மயானத்துக்குக் கொண்டு சென்று பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளார் எனவும், உறவினர்களுக்குச் சந்தேகம் வராமல் இருப்பதற்காக கணவர் மாயமானதாக பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்பதும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தேசிய நினைவுச் சின்னமாகும் ராமர் பாலம்?




ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கக் கோரிய வழக்கில் பெப்ரவரி முதல் வாரம் பதில் மனு தாக்கல் செய்ய, மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ் வழக்கு தொடர்பான விசாரணை, தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் மற்றும் பி.எஸ்.நரசிம்ஹா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தபோது, கடந்த ஆண்டு டிசம்பர் மாதமே ஏன் மனுத்தாக்கல் செய்யவில்லை என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதனையடுத்து இந்த விவகாரம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளதாக மத்திய அரசு வழக்குரைஞர் கூறியதையடுத்து, வழக்கு விசாரணையை அடுத்த மாதம் இரண்டாவது வாரத்திற்கு ஒத்தி வைத்துள்ளனர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சிற்றியை வென்ற யுனைட்டெட்

**தோற்ற லிவர்பூல், லெய்செஸ்டர், எவெர்ற்றன்**


இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

யுனைட்டெட் சார்பாக, ப்ரூனோ பெர்ணாண்டஸ், மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜக் கிரலிஷ் பெற்றார்.

இந்நிலையில், பிறைட்டன் அன்ட் ஹொாவ் அல்பியனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் தோல்வியடைந்தது.

இதேவேளை, நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற செளதாம்டனுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோல்வியடைந்தது.



## அத்லெட்டிகோ செல்லும் மெம்பிஸ் டிபே?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான மெம்பிஸ் டிபே, இம்மாதம் கழகத்தை விட்டு வெளியேறி இன்னொரு லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டுக்குச் செல்லத் தயாராகவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு பார்சிலோனாவில் இணைந்த 28 வயதான டிபே, 42 போட்டிகளில் 14 கோல்களைப் பெற்றுள்ளார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் மிலன் லெக்கே போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், லெக்கேயின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் சமப்படுத்தியது.

> **லெக்கே சார்பாக பெடெரிக்கோ பஷிறொட்டோ ஒரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது**

மிலன் சார்பாக, றஃபேல் லியோ, டேவிடே கலப்ரியா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லெக்கே சார்பாக பெடெரிக்கோ பஷிறொட்டோ ஒரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.




சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில்

## வென்ற சம்மாந்துறை ஸ்பார்டன்ஸ் விளையாட்டுக் கழகம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகத்துடனான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் 2 - 0 என்ற கோல் கணக்கில் சம்மாந்துறை ஸ்பார்டன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

ஸ்பார்டன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில், நசீத், ஜனுஸ்கான் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

நேபாளம்

நேபாளம் விமான விபத்து

# 40 உடல்கள் மீட்பு



நேபாளத்தில் உள்ள போக்கரா சர்வதேச விமான நிலையம் அருகே எட்டி ஏர்லைன்ஸ் விமானம் ஞாயிற்றுக்கிழமை (14) விபத்துக்குள்ளானது.

விமான விபத்து நடந்த பகுதியிலிருந்து 40 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

காஸ்கி மாவட்ட உதவி தலைமை அதிகாரி குருதத்தா தாகல், இரண்டு பேர் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால், அவர்களுடைய நிலை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது என்று கூறினார்.

“விபத்துப் பகுதியிலிருந்து இரண்டு பேர் உயிருடன் கண்டுபிடிக்கப்படுள்ளனர்,” என்று தாகல் கூறினார்.

“செட்டி கோஞ்சில் காணாமல் போனதாக சந்தேகிக்கப்படும் நபர்களைத் தேடுவதற்காக மீட்புப் பணியாளர்கள் கயிற்றில் தொங்கியபடி இறங்கியுள்ளார்கள்,” என்று அவர் கூறினார்.

விமானப் பயணிகளில் 53 நேபாள குடிமக்களும் 5 இந்தியர்களும் இருந்ததாக நேபாளத்தின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைய செய்தித் தொடர்பாளர் கூறினார்.

ரஷ்யாவை சேர்ந்த 4 பயணிகள், கொரியாவிலிருந்து இரண்டு பயணிகள் மற்றும் அயர்லாந்து, ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒரு பயணியும் இருந்ததாகக் கூறினார்.




மாலி

## இராணுவத்தினர் 14 பேர் உயிரிழப்பு

மாலியில் ஜிஹாதிகளுடன் நடைபெற்ற மோதலில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய மாலியில் மோப்டி மற்றும் செகோவ் நகரங்களுக்கு இடையே கண்ணிவெடிகள் மூலம் இராணுவத்தினர் தாக்கப்பட்டதையடுத்து இரு தரப்பினரிடையே மோதல் வெடித்தது.

இம்மோதலில் இதுவரை 14 இராணுவ வீரர்கள் உயிரிழந்திருப்பதாகவும், 11 பேர் காயமடைந்ததாகவும் இராணுவம் தெரிவித்துள்ளநிலையில், ஜிஹாதிகள் தரப்பில் 31 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.



சீனா

## 60, 000 பேர் வரை உயிரிழப்பு

சீனாவில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகின்றது.

இந்நிலையில் பொதுமுடக்க கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட கடந்த மாதம் 8ஆம் திகதியில் இருந்து ஜனவரி 12ஆம் திகதி வரை 59,938 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்திருப்பதாக சுகாதார அதிகாரி ஜியாவோ யாஹுய் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட இறப்புகள் மட்டுமே என்றும், மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவுதி

## 7 ஆண்டுகளுக்குப் பின்னர் கைகோர்த்த இரு துருவங்கள்



7 ஆண்டுகளுக்குப் பின் ஈரான் மற்றும் சவுதி அரேபியா இடையே மீண்டும் தூதரகங்களைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

லெபனான் நாட்டின் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய ஈரான் வெளியுறவு அமைச்சர் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் இரு நாடுகளின் கருத்தில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கடந்த 2016ஆம் ஆண்டுக்குப் பின் இருநாடுகளிடையே ஏற்பட்ட உயர்மட்டத் தொடர்பு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.




அமெரிக்கா

## 31 வயதில் 57 பிள்ளைகள்; திருப்தி அடையாத இளைஞர்

அமெரிக்காவைச் சேர்ந்த 31 வயதான இளைஞர் ஒருவர் 57 பிள்ளைகளுக்கு தந்தையாக இருந்தும் தற்போது வரை பாலியல் வாழ்க்கையை முறையாக அனுபவிக்கவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளார்.

கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த ‘கைலே கோர்டி‘ என்ற குறித்த இளைஞர் விந்தணு கொடையாளராக உள்ளார். இலவச சேவையாக அவர் இதனைச் செய்து வருகின்றார். இவர் மூலம், பல பெண்கள் பயனடைந்துள்ளனர்.

அந்த வகையில் இவருக்கு 57 பிள்ளைகள் உள்ளனர் எனவும், இன்னும் 14 குழந்தைகள் பிறக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கயில் ”குழந்தைளின்றி வேதனைப்படும் குடும்பத்தினருக்கு உதவும் எண்ணத்தோடு இலவசமாக இதனைச் செய்கின்றேன்.

இச்சேவையைத் தவிர தனக்கு வேறு பாலியல் வாழ்க்கை இல்லை. இதனைப் பொழுதுபோக்காகச் செய்து வருகின்றேன். எனது இந்த வித்தியாசமான பொழுதுபோக்கை புரிந்து கொண்டு என்னை ஏற்கும் பெண்ணை வரவேற்கின்றேன்” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

## இராணுவ அமைச்சருக்கு தூக்குத் தண்டனை



ஈரானில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை துணை இராணுவ அமைச்சராக இருந்தவர் அலிரேசா அக்பரி.

ஈரானில் பிறந்த இவர் பிரித்தானியாவிலும் குடியுரிமை பெற்றிருந்தார். துணை இராணுவ அமைச்சர் பதவியில் இருந்து விலகிய பிறகு அக்பரி அடிக்கடி பிரித்தானியாவுக்குச் சென்று வந்தார்.

இதனால் அவர் பிரித்தானியாவுக்கு உளவு பார்ப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அக்பரி அதனை திட்டவட்டமாக மறுத்தார். இந்த சூழலில் கடந்த 2019ஆம் ஆண்டு அக்பரி பிரித்தானியாவிலிருந்து இருந்து ஈரான் திரும்பிய அவர் நீண்டகாலமாக பொதுவெளியில் தோன்றவில்லை.

அதன்பின்னர் அவர் பிரித்தானியாவுக்கு உளவுபார்த்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டது தெரியவந்தது.

இதற்குபிரித்தானியா , அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்து, அக்பரியை விடுதலை செய்யும்படி ஈரானை வலியுறுத்தின. ஆனால் அதை பொருட்படுத்தாத ஈரான் அரசு அக்பரி மீதான விசாரணையை தொடங்கியது.

இவ்விசாரணையின் முடிவில் அக்பரிக்கு மரண தண்டனை விதித்து ஈரான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதற்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்தன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை 16 ஜனவரி 2023, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.